
0776906182

தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06


T.P- 0774357193

## சாதாரண தரப் பரீட்சை இரண்டு வாரத்திற்கு ஒத்திவைப்பு




எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த 2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை இரண்டு வாரங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது. அதன்படி. எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மலையகப் பல்கலைக்கழகம் – ஜனாதிபதி உத்தரவு



மலையக பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு. சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார். நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (10) நடைபெற்றது.

இதன்போது மலையக பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும். அமைச்சருமான ஜீவன் தொண்டமான் விடுத்த கோரிக்கையை ஏற்றே. ஜனாதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்தார். நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையால் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அடுத்தக்கட்ட நகர்வுகள் ஸ்தம்பித்தன. இந்நிலையில் இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார். இதன்படி விரைவில் பணி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான். நாடாளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஷ்வரன். வீ.இராதாகிருஷ்ணன். எஸ்.பி.திஸாநாயக்க. சீ.பீ ரத்னாயக்க ஆகியோரும். ஜனாதிபதி செயலாளர். மாகாண ஆளுநர். அரச அதிபர். பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது ஸ்தம்பித்த நிலையில் உள்ள அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பது பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன். நுவரெலியா மாவட்ட சுற்றுலா அபிவிருத்தி. வசந்தகால பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

## கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்



கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏப்ரல் 09 ஆம் திகதி பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவிச்சத்தியம் செய்துகொண்டனர்.

கணக்காய்வாளர் நாயகம் பதவி அடிப்படையில் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராவார். அதற்கமைய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன பதவிச்சத்தியம் செய்துகொண்டார்.

அது மாத்திரமன்றி ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற நீதிபதி நிஹால் சுனில் ராஜபக்ஷ, நந்தசீலி கொடகந்த, ஞானானந்தராஜா தேவஞானன், ஏ.எம். தர்மஜித் நயனகாந்த ஆகியோரும் பதவிச்சத்தியம் செய்துகொண்டனர்.

## ஆங்கில மற்றும் கணனி தொழிநுட்ப பாடநெறிக்கு புலமைப்பரிசில் வழங்கல்



சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி உதவி பெறும் மாணவர்களுக்கு கல்முனை எமினன்ஸ் கல்லூரி கணனி மற்றும் ஆங்கில கற்கை நெறிகளுக்கு இலவச புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு (10) திங்கட்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல். யூ.ஜூனைதாவின் வழிகாட்டலில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனின் முயற்சியினால் இப்புலமைப்பரிசில் 30 மாணவ. மாணவிகளுக்கு கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ். எம்.சப்ராஸ் கௌரவ அதிதியாகவும் கல்முனை எமினன்ஸ் கல்லூரியின் பணிப்பாளர் எம்.ஏ.எம்.மாஹிர் விசேட அதிதியாகவும். தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம். சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.றிபாயா. ஆங்கில விரிவுரையாளர் எம்.பி.எம்.நௌஷாட் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். இதில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே.ஆதம்பாவா. எம்.ஐ.அன்சார். ஏ.எம்.நளீம் உள்ளிட்ட பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இப்புலமைப் பரிசில் திட்டத்திற்காக ஒரு மாணவருக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் 30 மாணவர்களுக்கும் 15 இலட்சம் ரூபாவினை கல்முனை எமினன்ஸ் கல்லூரி செலவு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சமுர்த்தி பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பு. சமுர்த்தி வங்கிச் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து கல்முனை எமினன்ஸ் கல்லூரி இப்புலமைப்பரிசில் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. (நூருல் ஹுதா உமர்)

## மன்னர் சார்லஸ் முடிசூட்டு விழா தொடர்பில் வெளியான அறிக்கை



இங்கிலாந்து ராணி 2-ம் எலிசபெத்தின் மறைவுக்கு பின்னர். அவரது மகன் சார்லஸ் மன்னராக அரியணை ஏறியபோதும். அதிகாரபூர்வ முடிசூட்டு விழா பல மாதங்களாக நடைபெறாமலே இருந்து வந்தது. இந்த நிலையில் மன்னர் 3-ம் சார்லசின் முடிசூட்டு விழா அடுத்த மாதம் (மே) 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கடந்த 1953-ம் ஆண்டு மறைந்த ராணி 2-ம் எலிசபெத்தின் முடிசூட்டு விழா நடந்தது. அதனை தொடர்ந்து. 70 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது அந்த பாரம்பரிய விழா நடைபெற இருக்கிறது. இந்த கோலாகலத்தை காண ஒட்டுமொத்த இங்கிலாந்தும் தயாராகி வருகிறது.

இந்த நிலையில் இந்த பிரமாண்ட விழா எப்படி நடைபெறும் என்ற விபரங்களை பக்கிங்ஹாம் அரண்மனை அறிக்கையாக வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது. விழா நடைபெறும் மே 6 ஆம் திகதி காலை மன்னர் 3-ம் சார்லஸ் மற்றும் ராணி கமிலா ஆகிய இருவரும் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் குளிர்சாதன வசதி கொண்ட குதிரை வண்டியில் பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து வெஸ்ட்மினிஸ்டர் அபே தேவாலயத்துக்கு வருவார்கள். சார்லசின் முடிசூட்டு விழாவுக்காக இங்கிலாந்து மன்னர்கள் பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த 700 ஆண்டுகள் பழைமையான தங்க முலாம் பூசப்பட்ட சிம்மாசனம் தயார்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முடிசூட்டு விழாவின்போது மன்னர் மூன்றாம் சார்லஸ் பாரம்பரிய மரபுப்படி கையில் செங்கோல் ஏந்தி அந்த சிம்மாசனத்தில் அமர்வார்.

அதை தொடர்ந்து. மூத்த மதகுருமார்களால் புனிதப்படுத்தப்பட்டு. மன்னர் ஆசீர்வதிக்கப்படுவார். அதன் பிறகு. புனித எட்வர்டின் கிரீடம் மன்னர் 3-ம் சார்லசுக்கு சூட்டப்படும். தொடர்ந்து பக்கிங்ஹாம் அரண்மனையின் பால்கனியில் இருந்துகொண்டு. நாட்டு மக்களுக்கு புதிய மன்னர் சார்லஸ் உரையாற்றுவார். அந்த தினமே. மன்னர் சார்லசின் மனைவியான கமிலாவும் இங்கிலாந்து ராணியாக முறைப்படி அறிவிக்கப்படுவார். மன்னரின் முடிசூட்டு விழாவில் உலகம் முழுவதிலும் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரபலங்களும். இங்கிலாந்தை சேர்ந்த தொண்டு மற்றும் சமூக குழுக்களின் 850 பிரதிநிதிகளும் பங்கேற்பார்கள் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 19 வருட இழுத்தடிப்பிற்கு முற்றுப்புள்ளி - பயனாளிகளுக்கு வீடுகள்





2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்காக கட்டப்பட்ட மேட்டு வட்டை 65 M வீட்டுத்திட்டம் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்திருந்தது. குறித்த வீட்டுத்திட்டத்திற்குரிய பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதில் தொடர்ந்தும் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாகவே இந்த வீடுகள் வழங்கப்படாமல் இருந்து வந்தது. பல அரசியல் பிரமுகர்களும், அதிகாரிகளும் இந்த வீட்டுத் திட்டத்தை பார்வையிட்டு அதனை விரைவில் வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கியபோதிலும் இன்றுவரை அவர்களால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனது.

குறித்த விட்டுத்திட்ட வீடுகள் உரிய மக்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததனால் அந்த வீடுகள் சேதமடைந்து உடைந்து களவாடப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டது. இந்நிலையில் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஜனாதிபதியினால் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த வகையில் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது மருதமுனையை சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத்திட்டம் தொடரில் கேள்வி எழுப்பியதுடன் எப்போது இந்த வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்படும் என்ற கேள்வியையும் கேட்டிருந்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் விளக்கம் அளிக்கும்போது, இந்த வீட்டுத்திட்டம் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயம். இனியும் இதனை இழுத்தடிக்காமல் உரிய பயனாளிகளை தேர்வுசெய்து அந்த வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுயளித்தார். எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் இந்த வீட்டுத் தொகுதி மக்களிடம் கையளிக்கப்படும். இதற்காக கல்முனை பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கைகளை எடுத்து உரிய பயனாளிகளை தெரிவுசெய்யும் பட்டியலை பூரணப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.


கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த வீட்டு திட்டத்தை மக்களுக்கு கையளிப்பதற்காக மருதமுனைக்கு அண்மையில் விஜயம் செய்த எஸ்.எம்.எம்.முஷாரப் MP 65 மீற்றர் வீட்டுத் திட்டத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபருடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைகளை விளக்கினார். இதற்கமைவாக ஏப்ரல் பத்தாம் திகதி இந்த வீடுகளை கையளிப்பதற்கான செயற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்புடன் இணைந்து கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் இந்த வீட்டுத்திட்டத்தின் ஒரு தொகுதி வீடுகள் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற விடுகள் கையளிக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் விடுகளையும் வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். குறித்த வீட்டுத்திட்டத்தை மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையிலும் ஒழுங்குபடுத்துவதிலும் முழுமையாக செயற்பட்ட கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், பாராளுமன்ற உறுப்பினரின் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் பீ.எம்.எம். ஜ ஃபர் ஆகியோருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

**(பாறுக் ஷிஹான்)**

# 534 வீதி விபத்துகளில் 564 பேர் பலி




இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஏப்ரல் 8 ஆம் திகதி வரை 534 வீதி விபத்துகளில் 564 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த காலப்பகுதியில் வீதி விபத்துக்களில் 1,345 பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

மேலும், இந்த விபத்துக்களில் 2,446 பேர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக வீட்டு வசதி



"உங்களுக்கு வீடு - நாட்டுக்கு நாளை" வீடமைப்பு உதவித் திட்டத்தின் 50 வீதமான வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதன்படி 2021ஆம் ஆண்டு 12231 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு அதில் 6039 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2022ஆம் ஆண்டு 1465 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 25 வீடுகளே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 1215 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதில் 727 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் மினுவாங்கொடை தொகுதியில் மட்டும் 159 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 78 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, "உங்களுக்கு வீடு - நாட்டுக்கு நாளை" வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம், இந்த வருட ஆரம்பத்தில் வீட்டுத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாத வேலைத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக திறைசேரியினால் 3,750 மில்லியன் ரூபா தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, "உங்களுக்கு வீடு - நாட்டுக்கு நாளை" வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வேலைகளை ஆரம்பித்து பூர்த்தி செய்ய முடியாத அனைத்து வீடுகளையும் கட்டி முடிக்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

உங்களுக்கு வீடு - நாட்டுக்கு நாளை வீடமைப்புத் திட்டம் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சியால் 2020 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது சொந்த வீடு இல்லாத குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கானது. இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ், இலங்கையிலுள்ள அனைத்து 14022 கிராம சேவைப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவுக்கும் ஒரு வீடாக 14022 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டது.

# கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த நபர்களுக்கான அறிவிப்பு

குடிவரவுத் திணைக்களம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த நபர்களுக்கு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் இது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களும் அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு முன்னதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் வந்து தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எல்லை நிர்ணய குழுவின் புதிய அறிக்கை கையளிப்பு

எல்லை நிர்ணய குழுவின் புதிய அறிக்கை இன்று (11) காலை பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகளின் வாக்குகள் மற்றும் வரைபடங்கள் அடங்கிய ஆவணம் எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவினால் கையளிக்கப்பட்டுள்ளது.

# சிறைக்கைதிகள் தொடர்பிலான தீர்மானம்

சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் எந்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டாலும் அவர்களைக் கவனித்துக்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாட்டின் சிறைச்சாலைகளில் தற்போது சுமார் 26,000 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 8,000 பேர் குற்றவாளிகள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் வழங்கும் வசதிகளுக்கு மேலதிகமாக சிறைக்கைதிகளுக்கு தேவையான நலன்புரி வசதிகளை வழங்குவதற்கு ஆய்வுக்குழுக்கள் செயற்பட வேண்டுமென அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

1934 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதன்முறையாக இலங்கையில் மனிதாபிமான முறையில் சிறைச்சாலை விதிமுறைகளில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்க சிறைச்சாலைகளுக்குள் 06 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறு குற்றங்களைச் செய்தவர்களை வீட்டுக் காவலில் வைக்க முடியுமா என்பதை ஆராய்வதற்கான சட்டங்களை தயாரிப்பதற்கு ஏற்கனவே குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.